DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 514/2019
Prosecution Witness PW 5
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.விஜயபாண்டி. | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 23.09.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது எலெக்ட்ரீசியனாக பணியாற்றி வருகிறேன். சாட்சி ரபீக் ராஜா என்பவரும் எலெக்ட்ரீசியன்தான். நானும், அவரும் நண்பர்களாவோம். கடந்த 08.04.2019 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் நானும், ரபீக் ராஜாவும் வேலையை முடித்துவிட்டு டீ சாப்பிடுவதற்காக மாட்டுதாவணி பஸ் ஸ்டாண்ட் அருகில் நின்று கொண்டிருந்தோம். அப்போது போலீசார் வந்தார்கள், மார்க் செய்து கொண்டிருந்தார்கள். பின்பு, வரைபடம் வரைந்து அதில் கையெழுத்து கேட்டார்கள். அதில் நானும், ரபீக் ராஜா என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. **3** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் எதுவும் தெரியுமா எனக்கேட்டார்கள், நான் தெரியாது என்று சொன்னேன். ......

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை -

டீ க்கடையில் என்னையும், ரபீக் ராஜாவையும் தவிர நிறையபேர் நின்றிருந்தனர். மேற்படி நின்றிருந்தவர்களிடம் போலீசார் கையெழுத்து கேட்டனரா என்றால் தெரியாது. நான் அண்ணாநகர் ஸ்டேசனுக்கு வேலைக்கு சென்ற இடத்தில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க வெள்ளைத்தாளில் கையெழுத்து செய்து தற்போது அதற்கேற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - விஜயபாண்டி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI

SESSIONS CASE No. 514/2019

Prosecution Witness PW 6

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அப்துல் ரஹ்மான் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 23.09.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது மதுரை, கீழச்சந்தைப்பேட்டை, காமாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் LPG Gas கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் கடந்த 2019ல் மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிறுத்தத்தில் இருசக்கர வாகன காப்பகத்தில் பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. இவ்வழக்கில் இறந்தநபரைத் தெரியும். அவர் இருசக்கர வாகன மெக்கானிக் ஆவார். அவர் மாட்டுத்தாவணி இருசக்கர வாகன காப்பகத்திற்கு முன்பாக கடை வைத்திருந்தார். சம்பவத்தன்று நான் காலை சுமார் 08.00 மணிக்கு வேலைக்கு வந்து பின்பு இரவு 08.00 மணியளவில் சென்றுவிட்டேன். இவ்வழக்கில் இறந்துபோனவர் எப்படி இறந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. மதுரை, அண்ணாநகர் காவல் நிலையத்தில் இருந்து வந்து பெயர், விலாசம் கேட்டார்கள் . நான் சொன்னேன். இவ்வழக்கு விஷயமாக ....

எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக அண்ணாநகர் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன்பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்படுகிறார்.)

அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை-

கடந்த 09.04.2019 அன்று அண்ணாநகர் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கையில் நான் 07.04.2019 அன்று நானும், வசந்த்-ம் சைக்கிள் ஸ்டாண்டில் டோக்கன் கொடுக்கும் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, சுமார் 11.00 மணியளவில் எங்களது சைக்கிள் ஸ்டாண்டிற்கு அருகில் உள்ள வேப்பமரத்தடியில் பஞ்சர் ஒட்டும்வேலை பார்த்து, அங்கேயே தண்ணியடித்து படுத்துக் கிடக்கும் விருதுநகர் மாவட்டம் ரேசல்பட்டியைச் சேர்ந்த முனியாண்டி மகன் கோவிந்தராஜ் என்பவருக்கும், பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட ஆம்னி பஸ் ஸ்டாண்டில் புரோக்கர் வேலை பார்க்கும் மதுரை, ஜெய்ஹிந்த்புரம், 1 வது வள்ளுவன் வடக்குத் தெருவைச் சேர்ந்த போஸ் மகன் அருண்குமார் ( ஆஜர் எதிரி) என்பவரும் ஒருவருக்கொருவர் அசிங்கமாக பேசி சண்டைபோட்டுக் கொண்டிருந்தனர் என்றும், அருண்குமார் ( ஆஜர் எதிரி) கோவிந்தராஜனைப் பார்த்து ஸ்டாண்டுக்கு வர்ற .....

வண்டிகளுக்கெல்லாம் ரிவிட் அடிக்கிற சப்பாத்திக் கள்ளி ஆணியை போட்டு பஞ்சர் ஆக்கி பின்பு பஞ்சர் பாத்து சம்பாதிச்சு அப்புடி குடிக்கனுமா என்று சத்தம்போட்டார் என்றும், அதற்கு இறந்த கோவிந்தராஜ் ஆஜர் எதிரி அருண் குமாரைப் பார்த்து நீ மட்டும் என்ன யோக்கியமா? டிக்கெட் கம்மியா எடுத்து தர்றேன்னு சொல்லி ஏமாத்தி புரோக்கர் வேல பாத்துதானடா சம்பாதிக்கிற என்று மாறி மாறி ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அருண்குமார் இவ்வழக்கில் இறந்த கோவிந்தராஜை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டான் என்றும், இதில் கோவிந்தராஜ் கீழே விழுந்து கிடந்தான் என்றும், அவன் போதையில்தான் எந்திரிக்க முடியாமல் கிடக்கிறான் என்றும், நமக்கு எதுக்கு வம்பு என்றும், நாங்கள் பாட்டிற்கு எங்கள் வேலையை பாத்துக் கொண்டிருந்தோம் என்றும், பின்னர் 08.04.2019 அன்று காலை சீக்கிரமாக வீட்டுக்கு போய்விட்டேன் என்றும், அன்று இரவு நைட் வேலைக்கு வந்தபோது, கோவிந்தராஜ் இறந்துகிடந்ததாகச் சொல்லி போலீசார் வந்து விசாரித்துவிட்டு போனதாக தெரிந்து கொண்டேன் என்றும், அண்ணாநகர் காவல் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு, .....

தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லையென வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஒப்பம் - அப்துல் ரஹ்மான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.